வணக்கம் நண்பர்களே...

இந்தப்பகுதி முற்றிலும் பத்தாவது தமிழ் சமச்சீர் புத்தகம் செய்யுள் பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட கேள்விகள் அடங்கிய தொகுப்பாகும். விடைகளும் ஒவ்வொரு பகுதியின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில வினாக்கள் புத்தகத்தை தாண்டி வெளியில் இருந்து எடுக்கப்பட்டவை.

எனவே முதலில் பாடப்புத்தகத்தை படித்து முடித்த பிறகு இந்தப்பகுதியில் உள்ள வினாக்களுக்கு பதில் அளித்து பழகுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பத்தாவது தமிழ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதிகள்:

1) வாழ்த்து
2) திருக்குறள்
3) ஏலாதி
4) சிலப்பதிகாரம்
5) தமிழ் வளர்ச்சி
6) கம்பராமாயணம்
7) நற்றிணை
8) புறநானூறு
9) பெரியபுராணம்
10) தமிழ் விடு தூது
11) தேவாரம்
12) சீறாப்புராணம்
13) கலித்தொகை
14) நந்திக்கலம்பகம்
15) நாலாயிரத்திவ்விய பிரபந்தம்
16) நிற்க நேரமில்லை

அனைவரும் அனைத்து வினாக்களுக்கும் பதில் அளித்து பழகி வெற்றிப்பெற என் வாழ்த்துக்கள்

இப்படிக்கு

மீண்டும் உங்கள் ஆதரவுடன்

கோ.பழனி முருகன்

## 1) வாழ்த்து

1) மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென் - எனத் தொடங்கும் வாழ்த்துப்பாடலானது எந்த புலவரால் இயற்றப்பட்டது?

A] தாயுமானவர்

B] மாணிக்கவாசகர்

C] கம்பர்

D] வள்ளலார்

2) கழல் - என்பதன் பொருள் யாது?

A] குழந்தை காலில் அணியும் அணிகலன்

B] இறைவன் காலில் அணியும் அணிகலன்

C] பெண்கள் காலில் அணியும் அணிகலன்

D] ஆண்கள் காலில் அணியும் அணிகலன்

3) மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென் - என்ற வரியில் கழல் என்ற சொல்லானது ஆகுபெயராய் கீழ்க்கண்ட யாருடைய திருவடியைக் குறிக்கிறது?

A] குழந்தையின் திருவடி

B] இறைவனின் திருவடி

C] பெண்களின் திருவடி

D] ஆண்களின் திருவடி

4) மாணிக்கவாசகர் பிறந்த ஊர் எது?

A] திருநாவலூர்

B] திருவான்மையூர்

C] திருவாதவூர்

D] திருவாமூர்

5) மாணிக்கவாசகர் கீழ்க்கண்ட யாரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்?

A] அரிமர்த்தன பாண்டியன்

B] வரகுண பாண்டியன்

C] அரிவர்த்தன பாண்டியன்

D] அமிர்த்தன பாண்டியன்

6) கீழ்க்கண்ட யாருக்காக மாணிக்கவாசகர் குதிரை வாங்க சென்றார்?

A] சேரர்

B] சோழர்

C] பாண்டியர்

D] பல்லவர்

7) குதிரை வாங்க சென்ற போது கீழ்க்கண்ட எந்த இறைவன் திருவருளால் மாணிக்கவாசகர் ஆட்கொள்ளப்பட்டார்?

A] திருவாதவூர்

B] திருவாமூர்

C] திருநாவலூர்

D] திருப்பெருந்துறை

8) ‘அழுது அடியடைந்த அன்பர்’ - என்று அழைக்கப்பட்டவர் யார்?

A] அப்பர்

B] சுந்தரர்

C] மாணிக்கவாசகர்

D] நாவுக்கரசர்

9) கீழ்க்கண்டவற்றில் மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் எது?

A] தேவாரம், திருமந்திரம்

B] திருவாசகம், திருக்கோவை

C] பிரபந்தமாலை, திருமுறைகள்

D] திருவிளையாடற்புராணம், திருப்புகழ்

10) மாணிக்கவாசகர் எழுப்பிய ஆவுடையார் கோவிலானது தற்போது எங்கு அமைந்துள்ளது?

A] திருப்பெருந்துறை

B] திருவான்மையூர்

C] திருவாதவூர்

D] திருவாமூர்

11) ஆவுடையார் கோவிலானது தமிழகத்தின் எந்த மாவட்டத்தில் உள்ளது?

A] நாமக்கல்

B] இராமநாதபுரன்

C] விருதாச்சலம்

D] புதுக்கோட்டை

12) மாணிக்கவாசகர் வாழ்ந்த காலம் யாது?

A] எட்டாம் நூற்றாண்டு

B] ஏழாம் நூற்றாண்டு

C] ஒன்பதாம் நூற்றாண்டு

D] பத்தாம் நூற்றாண்டு

13) சைவத்திருமுறைகளில் எத்தனையாவது திருமுறையாக மாணிக்கவாசகரின் நூல்கள் வைக்கப்பட்டுள்ளன?

A] நான்காவது திருமுறை

B] ஆறாவது திருமுறை

C] ஒன்பதாவது திருமுறை

D] எட்டாவது திருமுறை

14) திருவாசகம் நூலிலுள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] அறநூற்று ஐம்பத்தெட்டுப் பாடல்கள்

B] அறநூற்று அறுபத்தெட்டுப் பாடல்கள்

C] அறநூற்று எண்பத்தெட்டுப் பாடல்கள்

D] அறநூற்று எழுபத்தெட்டுப் பாடல்கள்

15) திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

A] கொன்ஸ்டான் ஜோசப் பெஸ்கி

B] ஜியார்ஜ் யூகிளோ போப்

C] எட்வின் அர்னால்ட்

D] எட்வர்ட் ஆலன்போ

16) கீழ்க்கண்ட எந்த நூலானது கல்நெஞ்சத்தையும் கசிந்துருகச் செய்யும் என்று கூறப்படுகிறது?

A] திருக்கோவை

B] திருமந்திரம்

C] திருவருட்பா

D] திருவாசகம்

17) மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென் - எனத் தொடங்கும் பாடலானது திருவாசகத்தின் கீழ்க்கண்ட எந்த பகுதியின் முதற்பாடலாக அமைந்துள்ளது?

A] திருச்சதகம்

B] திருவம்மானை

C] திருப்பொற்சுண்ணம்

D] திருவுந்தியார்

18) மாணிக்கவாசகர் எழுதிய திருவாசக நூலானது மொத்தம் எத்தனை பதிகங்களை கொண்டது?

A] 52 பதிகங்கள்

B] 51 பதிகங்கள்

C] 54 பதிகங்கள்

D] 53 பதிகங்கள்

19) உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரைவிடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறாநிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தைக் கவர்கின்றனர் யாரும் இல்லை - என்று மாணிக்கவாசகர் பற்றி கூறியவர் யார்?

A] வீரமாமுனிவர்

B] அண்ணாதுரை

C] ஜி.யு.போப்

D] மௌனி

20) மாணிக்கவாசகர் பிறந்த ஊரான திருவாதவூரானது கீழ்க்கண்ட எந்த மாவட்டத்தின் அருகில் உள்ளது?

A] திருச்சி

B] புதுக்கோட்டை

C] வேலூர்

D] மதுரை

## விடைகள் - வாழ்த்துப்பகுதி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 5 | A | 9 | B | 13 | D | 17 | A |
| 2 | D | 6 | C | 10 | A | 14 | A | 18 | B |
| 3 | B | 7 | D | 11 | D | 15 | B | 19 | C |
| 4 | C | 8 | C | 12 | C | 16 | D | 20 | D |

## 2) திருக்குறள்

1) எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் கீழ்க்கண்ட எது மட்டுமே நமக்கு நல்ல துணையாக வரும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] நட்பு

B] அன்பு

C] ஒழுக்கம்

D] பண்பு

2) காக்க - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] பெயரெச்சம்

B] வியங்கோள் வினைமுற்று

C] வினையெச்சம்

D] வினைத்தொகை

3) பரிந்து - என்பதன் பொருள் யாது?

A] சிறப்பு

B] பாசம் கொள்ளுதல்

C] உயர்குடி

D] விரும்பி

4) ஒருவனுடைய ஒழுக்கம் குறைந்தால் அவனுடைய கீழ்க்கண்டவற்றில் எது அழிந்துபோகும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] குடிப்பிறப்பு

B] கல்வி

C] நட்பு

D] பண்புடைமை

5) பொறாமை உடையவனிடம் எது நிலைக்காது என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] கல்வி

B] செல்வம்

C] கடமை

D] பொறுமை

6) அழுக்காறு - என்பதன் பொருள் யாது?

A] ஒழுக்கமுடையவர்

B] ஒழுக்கமில்லார்

C] பொறுமை

D] பொறாமை

7) ஒல்கார் - என்பதன் பொருள் யாது?

A] விலகுவோர்

B] விலகமாட்டார்

C] மனவலிமையற்றோர்

D] மனவலிமையுடையோர்

8) உரவோர் - என்பதன் பொருள் யாது?

A] விலகுவோர்

B] விலகமாட்டார்

C] மனவலிமையற்றோர்

D] மனவலிமையுடையோர்

9) உரவோர் - என்பதன் இலக்கணம் குறிப்பு யாது?

A] வியங்கோள் வினைமுற்று

B] வினையாலணையும் பெயர்

C] வினைத்தொகை

D] உரிச்சொற்றொடர்

10) உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும் - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள உலகம் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] பூமி

B] ஒழுக்கமுடையோர்

C] உயர்ந்தோர்

D] மனவலிமையுடையோர்

11) பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும் - எனத் தொடங்கும் குறளானது கீழ்க்கண்ட எந்தச் சிறப்பைக் கூறுகின்றது?

A] உதவியின் சிறப்பு

B] பகைவரின் பண்பு

C] அன்புடையின் சிறப்பு

D] காலமறிதலின் சிறப்பு

12) கீழ்க்கண்ட எந்த செயலானது ஒருவனுக்கு செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] காலத்திற்கு பொருந்திய செயலை மேற்கொள்வது

B] ஒழுக்கத்தின் படி நடப்பது

C] பிறருக்கு உதவும் செயலை மேற்கொள்வது

D] மற்றவர்களிடம் அன்பு செலுத்துவது

13) ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருநகர் - என்ற குறளில் இடம்பெற்றுள்ள பொருநகர் என்ற சொல்லானது கீழ்க்கண்ட எந்த விலங்கை குறிப்பிடுகிறது?

A] யானை

B] ஆட்டுக்கடா

C] காளை

D] மான்

14) கீழ்க்கண்ட யாரை காணும் போது பணிவாக இருத்தல் வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] ஆசிரியர்

B] ஒழுக்கமுடையவர்

C] பகைவர்

D] பெரியவர்கள்

15) செறுநர் - என்பதன் பொருள் யாது?

A] உறவினர்

B] நண்பர்கள்

C] ஊனமுற்றோர்

D] பகைவர்

16) கூம்பும் - என்பதன் பொருள் யாது?

A] கூர்மையுடைய

B] கூர்மையற்ற

C] வாய்ப்பற்ற

D] வாய்ப்புடைய

17) கீழ்க்கண்டவற்றில் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' - என்னும் பொதுநெறி காட்டிய புலவர் யார்?

A] தொல்காப்பியர்

B] திருவள்ளுவர்

C] அகத்தியர்

D] இளங்கோவடிகள்

18) தமிழக அரசு கீழ்க்கண்ட எந்த நாளை திருவள்ளுவர் நாளாக அறிவித்து கொண்டாடி வருகிறது?

A] தைத்திங்கள் முதல் நாள்

B] தைத்திங்கள் இரண்டாம் நாள்

C] தைத்திங்கள் மூன்றாம் நாள்

D] தைத்திங்கள் நான்காம் நாள்

19) கீழ்க்கண்ட எக்காரணங்களால் திருக்குறளானது உலகப்பொதுமுறை என போற்றப்படுகிறது?

A] மேன்மையான கருத்துக்களை குறள்வெண்பாக்களால் கூறுவதால்

B] ஈரடிகளில் விரிவான பொருளைத் தருவதால்

C] நாடு, மதம், மொழி, இனம், காலம் ஆகியவற்றை கடந்து நிற்பதால்

D] உலகமொழிகளில் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டதால்

20) இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே - என்று திருக்குறளை போற்றியவர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] கவிமணி

D] சுரதா

21) மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் அவர்கள் திருக்குறள் நூலை முதன்முதலில் எந்த ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார்?

A] 1812

B] 1814

C] 1816

D] 1818

22) ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருநகர் - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள அணியிலக்கணம் எது?

A] எடுத்துக்காட்டு உவமையணி

B] இல்பொருள் உவமையணி

C] உவமையணி

D] உருவக அணி

23) கொக்ககொக்க கூம்பும் பருவத்து மற்றதன் - எனத்தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள அணி எது?

A] எடுத்துக்காட்டு உவமையணி

B] வஞ்சிப்புகழ்ச்சி அணி

C] வேற்றுமையணி

D] உவமையணி

24) உறாஅமை - என்பதன் பொருள் யாது?

A] துன்பம்

B] துன்பம் வராமல்

C] தூக்கம் வராமை

D] ஆராய்ந்து

25) ஒருவர் பெறவேண்டிய அரிய பேறுகளுள் எல்லாம் அரிய பேறு எதுவென்று வள்ளுவர் கூறுகிறார்?

A] அறிவறிந்தவர்களிடம் கல்வி கற்பது

B] அறிவறிந்த பெரியோர்களை மதிப்பது

C] அறிவறிந்த பெரியோர்களை உறவாக்கி கொள்வது

D] அறிவறிந்தவர்களிடம் ஒழுக்கமுடன் நடப்பது

26) சிறந்த பொருளை நல்வழியில் மிகுதியாக ஈட்டியவர்க்கு, மற்றைய எந்த இருபொருள்கள் ஒருசேரக் கைகூடும் எளிய பொருள்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

A] அறம், செல்வம்

B] செல்வம், வீரம்

C] அறம், வீடு

D] இன்பம், அறம்

27) எண்பொருள் - என்பதன் பொருள் யாது?

A] இயல்பாய் கிடைக்கும் பொருள்

B] சிறந்த பொருள்

C] அரியதாய் கிடைக்கும் பொருள்

D] சிறப்பற்ற பொருள்

28) திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் யார் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

A] அன்புள்ள பெற்றோர்

B] ஆர்வமுள்ள நண்பர்

C] மூத்த அறிவுடையார்

D] கல்வி கற்பிக்கும் ஆசிரியர்

29) அரியவற்றுள் எல்லாம் அரிது____பேணித் தமராக் கொளல்

A] சிறியவர்

B] பெரியவர்

C] உறவினர்

D] நண்பர்

30) முதலிலார்க்கு_____இல்லை என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

A] ஊதியம்

B] நட்பு

C] பகை

D] அன்பு

31) திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியதன்று. அது மன்பதைக்கு - உலகுக்கு

பொது - என்று திருக்குறளை போற்றியவர் யார்?

A] பாரதிதாசன்

B] மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்

C] திரு.வி.கலியாணசுந்தரம்

D] கி.ஆ.பெ.விசுவாதம்

32) திருக்குறள் தோன்றாவிட்டால், தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றாவிட்டால், தமிழ்மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது - என்று திருக்குறளை போற்றியவர் யார்?

A] கி.ஜீவானந்தம்

B] மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்

C] திரு.வி.கலியாணசுந்தரம்

D] கி.ஆ.பெ.விசுவாதம்

33) முதலிலார்க்(கு) ஊதிய மில்லை, மதலையாம் - எனத் தொடங்கும் குறளில் அமைந்துள்ள அணியிலக்கணம் யாது?

A] உவமையணி

B] வேற்றுமையணி

C] எடுத்துக்காட்டு உவமையணி

D] உருவக அணி

34) பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் - என்ற குறளில் இடம்பெற்றுள்ள அணி எது?

A] உவமையணி

B] சொல் பின்வருநிலையணி

C] எடுத்துக்காட்டு உவமையணி

D] இல்பொருள் உவமையணி

35) அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ் - என்ற குறளில் இடம்பெற்றுள்ள அணி எது?

A] உருவக அணி

B] சொல் பின்வருநிலையணி

C] எடுத்துக்காட்டு உவமையணி

D] வஞ்சிப்புகழ்ச்சியணி

36) அருள் என்னும் குழந்தையானது கீழ்க்கண்ட எந்த தாயால் பெறப்பட்டால் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] செல்வம்

B] பொருள்

C] கல்வி

D] அன்பு

37) அருள் என்னும் குழந்தையானது கீழ்க்கண்ட எந்த வளர்ப்புத்தாயால் பேணிப்பாதுகாக்கப்படுகிறாள் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A] செல்வம்

B] பொருள்

C] கல்வி

D] அன்பு

38) பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும் - எனத்தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள அணியிலக்கணம் எது?

A] உவமையணி

B] சொல் பின்வருநிலையணி

C] ஒருமருங்கு உருவக அணி

D] வஞ்சிப்புகழ்ச்சியணி

விடைகள் - திருக்குறள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 9 | B | 17 | B | 25 | C | 33 | C |
| 2 | B | 10 | C | 18 | B | 26 | D | 34 | B |
| 3 | D | 11 | D | 19 | C | 27 | A | 35 | A |
| 4 | A | 12 | A | 20 | B | 28 | C | 36 | D |
| 5 | B | 13 | B | 21 | A | 29 | B | 37 | B |
| 6 | D | 14 | C | 22 | C | 30 | A | 38 | C |
| 7 | B | 15 | D | 23 | D | 31 | C | | |
| 8 | D | 16 | C | 24 | B | 32 | D | | |

## 3) ஏலாதி

1) வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு - எனத் தொடங்கும் பாடலை இயற்றிய புலவர் யார்?

A] கணிதமேதாவியார்

B] மூன்றையரையனார்

C] காரியாசன்

D] அதிவீரராம பாண்டியர்

2) கணிதமேதாவியர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த சமயத்தை சார்ந்தவர் ஆவார்?

A] சைவ சமயம்

B] வைணவ சமயம்

C] சமண சமயம்

D] பௌத்த சமயம்

3) சமண சமயத்திற்கே உரிய உயரிய அறக்கருத்து எது?

A] கல்லவாமை

B] கொல்லாமை

C] களவாமை

D] தர்மத்தின் தன்மை

4) கணிதமேதாவியர் இயற்றிய வேறு நூல் எது?

A] களவழி நாற்பது

B] திணைமாலை ஐம்பது

C] திணைமாலை எழுபது

D] திணைமாலை நூற்றைம்பது

5) ஏலாதி நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] 80 வெண்பாக்கள்

B] 81 வெண்பாக்கள்

C] 82 வெண்பாக்கள்

D] 83 வெண்பாக்கள்

6) ஏலாதி நூலில் நான்கடிகளில் கீழ்க்கண்ட எத்தனை அருங்கருத்துக்களை கூறுகிறது?

A] நான்கு அருங்கருத்துக்கள்

B] ஐந்து அருங்கருத்துக்கள்

C] ஆறு அருங்கருத்துக்கள்

D] மூன்று அருங்கருத்துக்கள்

7) ஏலாதி நூலில் இடம்பெற்றுள்ள ஆறு அருமருந்துகளில் முதன்மையாக விளங்கும் மருந்து எது?

A] ஏலம்

B] சுக்கு

C] திப்பிலி

D] இலவங்கம்

8) கீழ்க்கண்ட எந்த நூலை படிக்கும் போது அதன் நற்கருத்துக்களானது, கற்போரின் அறியாமையை அகற்றும் என்று கூறப்படுகிறது?

A] சிறுபஞ்சமூலம்

B] கார் நாற்பது

C] திரிகடுகம்

D] ஏலாதி

9) வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு - என்ற பாடலானது ஏலாதி நூலில் எத்தனையாவது பாடலாக அமைந்துள்ளது?

A] 55 வது பாடல்

B] 59 வது பாடல்

C] 52 வது பாடல்

D] 57 வது பாடல்

10) கணிதமேதாவியாரின் காலம் யாது?

A] கி.பி. மூன்றாம் நூற்றாண்டு

B] கி.பி. நான்காம் நூற்றாண்டு

C] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

D] கி.பி. ஆறாம் நூற்றாண்டு

விடைகள் - ஏலாதி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 3 | B | 5 | B | 7 | A | 9 | B |
| 2 | C | 4 | D | 6 | C | 8 | D | 10 | C |

## 4) சிலப்பதிகாரம்

1) கீழ்க்கண்டவற்றில் காவேரிப்பூம்பட்டினத்தை சேர்ந்த யார் கலையுணர்வும் வறியோர்க்கு உதவும் நற்பண்பும் மிக்கவராக விளங்கினார்?

A] மாசாத்துவான்

B] கோவலன்

C] மாநாயகன்

D] கண்ணகி

2) மாதவி கீழ்க்கண்ட எந்த விழாவின் போது கானல்வரிப் பாடல்களை பாடினாள்?

A] கோவில்விழா

B] சூரியவிழா

C] பவளவிழா

D] இந்திரவிழா

3) வாணிகம் செய்தற்பொருட்டு கண்ணகியுடன் கோவலன் சென்ற இடம் எது?

A] பூம்புகார்

B] மதுரை

C] சோழநாடு

D] சேரநாடு

4) வாணிகம் செய்யும் பொருட்டு கோவலன், கண்ணகி கிளம்பிய போது அவர்களுடன் வழித்துணையாக சென்றவர் யார்?

A] வசந்தமாலை

B] மாங்காட்டு மறையோன்

C] கவுந்தியடிகள்

D] கௌசிகன்

5) கவுந்தியடிகள் - என்பவர் கீழ்க்கண்ட எந்த சமயத்தை சேர்ந்த துறவி யார்?

A] பௌத்தம்

B] சைவம்

C] வைணவம்

D] சமணம்

6) கவுந்தியடிகள் அவர்கள் மதுரை நகர்ப்புறத்தில் கீழ்க்கண்ட யாரிடம் கோவலன் மற்றும் கண்ணகியை ஒப்படைத்தார்?

A] மாதவி

B] மாதரி

C] மாடலன்

D] மாதிரி

7) 'பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்தலை பீடத்தில்' ஏறிய இளங்கொடியவள் யார்?

A] பத்ரகாளி

B] துர்க்கை

C] கொற்றவை

D] காளி

8) கன்னியர் எழுவருள் இளையவள் யார்?

A] பிடாரி

B] பத்ரகாளி

C] துர்க்கை

D] கொற்றவை

9) கீழ்க்கண்டவற்றில் இறைவனையே நடமானடச் செய்தவள் யார்?

A] பிடாரி

B] கொற்றவை

C] துர்க்கை

D] பத்ரகாளி

10) தாருகன் என்ற அசுரனின் பரந்த மார்பை பிளந்தவள் யார்?

A] பிடாரி

B] பத்ரகாளி

C] துர்க்கை

D] கொற்றவை

11) தன் உள்ளத்தில் கறுவு கொண்டாள் போலும், மிக்க சினம் கொண்டாள் போலவும் விளங்குபவள் யார் என்று இளங்கோவடிகள் கூறுகிறார்?

A] துர்க்கை

B] கண்ணகி

C] காளி

D] பத்ரகாளி

12) புறாவின் துன்பத்தை போக்கிய சிபி மன்னன், பசுவின் துயரம் கேட்டு தன் மகனை தேர்சக்கரத்தில் இட்டு கொன்ற மனுநீதிசோழன் ஆகிய பெருமைமிகுந்த மன்னர்கள் எந்த நகரை சேர்ந்தவர்கள் என்று இளங்கோவடிகள் கண்ணகி மூலம் தெரிவிக்கிறார்?

A] பூம்புகார் நகரம்

B] உறையூர் நகரம்

C] மதுரை நகரம்

D] புகார் நகரம்

13) கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று இணையடி - என்ற தொடரை கீழ்க்கண்டவற்றில் யார் கூறினார்?

A] கோப்பெருந்தேவி

B] கண்ணகி

C] பாண்டிய மன்னன்

D] ஊர் மக்கள்

14) கொற்றம் - எனபதன் பொருள் யாது?

A] கறுவு

B] அரச நீதி

C] ஆணவம்

D] கொல்லுதல்

15) மடக்கொடி - என்பதன் இலக்கண குறிப்பு யாது?

A] உரிச்சொற்றொடர்

B] வினைத்தொகை

C] அன்மொழித்தொகை

D] விணையாலனையும் பெயர்

16) தடக்கை - என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?

A] உரிச்சொற்றொடர்

B] வினைத்தொகை

C] அன்மொழித்தொகை

D] விணையாலனையும் பெயர்

17) பெண்ணணகு - என்ற சொல்லை பிரித்து எழுதுக?

A] பெண் + அணகு

B] பெண் + அணங்கு

C] பெண் + அங்கு

D] பெண்ண் + அணங்கு

18) இளங்கோவடிகள் இளமையிலேயே துறவறம் பூண்டு எந்த இடத்தில் தங்கி இருந்தார்?

A] மணவாயிற்கோட்டம்

B] குணவியற்கோட்டம்

C] குணவாயிற்கோட்டம்

D] குணவயற்கோட்டம்

19) இளங்கோவடிகள் வாழ்ந்த காலம் யாது?

A] கி.பி. மூன்றாம் நூற்றாண்டு

B] கி.பி. நான்காம் நூற்றாண்டு

C] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

D] கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

20) 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை' - எனப் புகழந்த புலவர் யார்?

A] பாரதியார்

B] பாரதிதாசன்

C] கவிமணி

D] முடியரசன்

21) சிலப்பதிகார நூலின் நூல் அமைப்பு யாது?

A] 3 காண்டம் + 30 காதைகள் + 5000 பாடல்கள்

B] 3 காண்டம் + 30 காதைகள் + 4395 பாடல்கள்

C] 3 காண்டம் + 30 காதைகள் + 5001 பாடல்கள்

D] 3 காண்டம் + 32 காதைகள் + 5000 பாடல்கள்

22) மதுரைக்காண்டத்தில் இடம்பெற்றுள்ள மொத்த காதைகள் எத்தனை?

A] 03 காதைகள்

B] 13 காதைகள்

C] 10 காதைகள்

D] 07 காதைகள்

23) புகார் காண்டத்தில் இடம்பெற்றுள்ள காதைகள் மொத்தம் எத்தனை?

A] 03 காதைகள்

B] 13 காதைகள்

C] 10 காதைகள்

D] 07 காதைகள்

24) வஞ்சிக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள காதைகள் மொத்தம் எத்தனை?

A] 04 காதைகள்

B] 13 காதைகள்

C] 10 காதைகள்

D] 07 காதைகள்

25) கீழ்க்கண்ட எந்த நூலானது உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என அழைக்கப்படுகிறது?

A] சீவகசிந்தாமணி

B] சிலப்பதிகாரம்

C] மணிமேகலை

D] கம்பராமாயணம்

26) சிலப்பதிகாரத்தை போற்றி புகழந்த பெயர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] முதற் காப்பியம்

B] குடிமக்கள் காப்பியம்

C] நாட்டியக் காப்பியம்

D] ஒற்றுமைக் காப்பியம்

27) 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மனியாரம் படைத்த தமிழ்நாடு' - என்று சிலப்பதிகார நூலை போற்றியவர் யார்?

A] சுரதா

B] மீனாட்சி சுந்தரனார்

C] பாரதிதாசன்

D] பாரதியார்

28) தன் கணவன் கள்வன் அல்லன் என கண்ணகி பாண்டிய மன்னனிடம் முறையிடும் நிகழ்ச்சியான வழக்குரை காதையானது சிலப்பதிகார நூலில் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது?

A] மதுரைக் காண்டம்

B] புகார்க் காண்டம்

C] வஞ்சிக் காண்டம்

D] எதுவும் இல்லை

29) வழக்குரை காதையானது மதுரை காண்டத்தின் எத்தனையாவது காதையாக அமைந்துள்ளது?

A] 03 காதை

B] 07 காதை

C] 10 காதை

D] 13 காதை

30) கீழ்க்கண்ட எக்காரணங்களால் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இருநூல்கள் இரட்டைகாப்பியம் என அழைக்கப்படுகிறது?

A] காலத்தாலும் பாவகையாலும் ஒன்றுபட்டதால்

B] கதைத்தொடர்பாலும் பாவகையாலும் ஒன்றுபட்டதால்

C] தொடர்ச்சி கதையாக ஒன்றுபட்டதால்

D] காலத்தாலும் கதையாலும் பாவகையாலும் ஒன்றுபட்டதால்

31) சிலப்பதிகார கதையின் உருவம் எது?

A] இசை நாடகம்

B] நாடகக் கதைவடிவம்

C] இசை நாட்டியம்

D] இசைப் பாடல்

32) 'வேங்கை மரத்தின்கீழ் ஒரு பெண்தெய்வத்தை பார்த்தோம்' - இக்கூற்றை கூறியவர் யார்?

A] சேரன் செங்குட்டுவன்

B] சீத்தலைச்சாத்தனார்

C] இளங்கோவடிகள்

D] மலைவாழ் மக்கள்

33) 'அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன்' - என்ற கூற்றை கூறியவர் யார்?

A] சேரன் செங்குட்டுவன்

B] சீத்தலைச்சாத்தனார்

C] இளங்கோவடிகள்

D] மலைவாழ் மக்கள்

34) 'இக்கதையை சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் இயற்றுவோம்' - என்ற கூற்றை கூறியவர் யார்?

A] தோலாமொழித்தேவர்

B] சீத்தலைச்சாத்தனார்

C] இளங்கோவடிகள்

D] அடியார்க்கு நல்லார்

35) 'அடிகள் நீரே அருளுக' - எனக் கூறியவர் யார்?

A] சேரன் செங்குட்டுவன்

B] சீத்தலைச்சாத்தனார்

C] இளங்கோவடிகள்

D] மலைவாழ் மக்கள்

36) சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மைகளில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] அரசியல் பிழைத்தோர்க்கு அரங் கூற்றாகும்

B] உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்

C] அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும்

D] ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்

37) இளங்கோவடிகள் கீழ்க்கண்ட எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A] சோழ நாடு

B] சேர நாடு

C] பாண்டிய நாடு

D] பல்லவ நாடு

## விடைகள் - சிலப்பதிகாரம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 9 | D | 17 | B | 25 | B | 33 | B |
| 2 | D | 10 | C | 18 | C | 26 | C | 34 | C |
| 3 | B | 11 | B | 19 | D | 27 | D | 35 | B |
| 4 | C | 12 | D | 20 | A | 28 | A | 36 | A |
| 5 | D | 13 | A | 21 | C | 29 | C | 37 | B |
| 6 | B | 14 | A | 22 | B | 30 | D | | |
| 7 | C | 15 | C | 23 | C | 31 | A | | |
| 8 | A | 16 | A | 24 | D | 32 | D | | |

## 5) தமிழ் வளர்ச்சி

1) தமிழ் நூல்களை எளிய நடையில் எழுதுதல் வேண்டும் என்றும் உலகின் புதிய ஆய்வுச் சிந்தனைகளை தமிழ்ப்படுத்தி விளக்கப் படங்களுடன் நூல்களாக்கிச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்தல் வேண்டும் - என்று தன் பாடல்கள் மூலம் கூறிய புலவர் யார்?

A] மகாகவி பாரதியார்

B] பாவேந்தர் பாரதிதாசன்

C] உவமைக்கவிஞர் சுரதா

D] கவிமணி தேசிகவிநாயகம்

2) எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும் - என்று கூறியவர் யார்?

A] பாவேந்தர்

B] உவமைக்கவிஞர்

C] கவிப்பேரரசு

D] புரட்சித்துறவி

3) பல்வேறு துறைநூல்களைப் பிறர் துணையின்றி எல்லோரும் படித்தறிந்து கொள்ளும் வகையில், தமிழில் வெளியடல் வேண்டும் என்று கூறிய புலவர் யார்?

A] வாணிதாசன்

B] அப்துல் ரகுமான்

C] நாமக்கல் கவிஞர்

D] பாரதிதாசன்

4) கீழ்க்கண்ட எந்த இடத்தில் தமிழக அரசு பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் அமைத்து சிறப்பித்துள்ளது?

A] திருச்சிராப்பள்ளி

B] மதுரை

C] நாமக்கல்

D] தஞ்சாவூர்

5) பாரதிதாசன் பிறந்த நாள் எது?

A] 1891 - பிப்ரவரி 29

B] 1891 - ஏப்ரல் 29

C] 1891 - மார்ச் 29

D] 1891 - ஜனவரி 29

6) தகத்தகாய - என்ற சொல் மூலம் பாவேந்தர் கூறும் புதிய சொல்லாக்கத்தை தந்த சொல் எது?

A] ஒளிமிகுந்த

B] அழகுக்கூடிய

C] சிறப்புமிகுந்த

D] அரியபொருள்

7) சாய்க்காமை - என்பதன் பொருள் யாது?

A] நீங்காமை

B] அழியக்கூடிய

C] வறுமை

D] அழிக்காமை

8) பாரதிதாசன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நூலை ஒரே இரவில் எழுதி முடித்தார்?

A] இருண்ட வீடு

B] தமிழக்கம்

C] அழகின் சிரிப்பு

D] குடும்பவிளக்கு

## விடைகள் - தமிழ் வளர்ச்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | A | 3 | D | 4 | A | 5 | B |
| 6 | C | 7 | D | 8 | B | | | | |

## 6) கம்பராமாயணம்

1) கைகேயின் மனத்தை வஞ்சக உரைகளால் கலைத்தவள் யார்?

A] மாதரை

B] மாதிரி

C] மந்தரை

D] மந்திரை

2) கல்திரள் - என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?

A] உருவகம்

B] உவமைத்தொகை

C] இரண்டாம் வேற்றுமைத்தொகை

D] அன்மொழித்தொகை

3) நீர்முகில் - என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு யாது?

A] உருவகம்

B] உவமைத்தொகை

C] இரண்டாம் வேற்றுமைத்தொகை

D] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை

4) குகன் வாழும் இடம் எது?

A] சிருங்கிபேரம்

B] கங்கைகரை

C] தோணித்துறை

D] சிருங்கினானூர்

5) கோதண்டம் என்னும் வில்லேந்தியவர் யார்?

A] இலக்குவன்

B] குகன்

C] இராமன்

D] சிவன்

6) குரிசில் - என்பதன் பொருள் யாது?

A] நிலவு

B] தலைவன்

C] பரிசில்

D] நெற்றி

7) கீழ்க்கண்ட யார் தாமரைமலைர் போன்ற கண்களை உடையவர் என்று கம்பர் கூறுகிறார்?

A] இலக்குவன்

B] சீதா அன்னை

C] இராமன்

D] குகன்

8) கீழ்க்கண்டவற்றில் யார் பிறைநிலவு போன்ற நெற்றியுடையவர் - என்று கம்பர் கூறுகிறார்?

A] சீதை

B] இலக்குவன்

C] குகன்

D] இராமன்

9) நயனம் - என்பதன் பொருள் யாது?

A] நிலவு

B] நெற்றி

C] துன்பம்

D] கண்கள்

10) விடுநனி கடிது - என்று இராமன் கீழ்க்கண்ட யாரிடம் கூறினார்?

A] குகன்

B] சீதை

C] இலக்குவன்

D] அந்தணர்

11) இராமன் படகை செலுத்து என்றவுடன் குகன் எவ்வாறு விரைவாக படகை செலுத்தியதை கீழ்க்கண்ட எந்த உவமையால் கம்பர் விளக்குகிறார்?

A] வில்லிருந்து புறப்பட்ட அம்புபோல

B] உடலில் வேகமாக ஓடும் குருதிபோல

C] உயிரின் ஏவலுக்கு மெய்செயல்படுவது போல

D] சூரிய ஒளியைக்கண்டு பனித்துளி உருகுவதுபோல

12) மடங்கிவிழும் அலைகளையுடைய கங்கையாற்றில் குகன் செலுத்திய படகானது எவ்வாறு செல்வதாக கவிஞர் கூறுகிறார்?

A] கொக்கு

B] நீர்க்கோழி

C] வாலை மீன்

D] இளம் அன்னம்

13) நனிகடிது - என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு யாது?

A] பண்புத்தொகை

B] உருவகத்தொடர்

C] உரிச்சொற்றொடர்

D] வினைத்தொகை

14) அமலன் - என்பதன் பொருள் யாது?

A] குற்றமுடையவன்

B] குற்றமற்றவன்

C] அன்பற்றவன்

D] அன்புடையவன்

15) கம்பர் பிறந்த ஊர் யாது?

A] திருப்பெருந்துறை

B] திருவாழுதவூர்

C] தேரழுந்தூர்

D] திருவாதவூர்

16) கம்பர் கீழ்க்கண்ட எந்த மன்னர் காலத்தில் வாழ்ந்தவர்?

A] முதல் குலோத்துங்கன்

B] இரண்டாம் விக்கிரமசோழன்

C] இரண்டாம் குலோத்துங்கன்

D] முதலாம் பராந்தகன்

17) தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளளை கீழ்க்கண்ட எத்தனை பாடல்களுக்கு ஒரு பாடல் வீதம் கம்பர் பாடிச் சிறப்பித்து உள்ளார்?

A] 1000 பாடல்கள்

B] 100 பாடல்கள்

C] 10 பாடல்கள்

D] 500 பாடல்கள்

18) கம்பர் இயற்றிய நூல்களில் தவறானது எது?

A] சரசுவதி அந்தாதி

B] திருக்கை வழக்கம்

C] சடகோபரந்தாதி

D] கோமதி அந்தாதி

19) கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு கீழ்க்கண்ட எந்த பெயரை சூட்டினார்?

A] கம்பராமாயணம்

B] வால்மீகி ராமாயணம்

C] இராமவதாரம்

D] கம்பர் ராமாயணம்

20) கம்பராமாயணத்தின் நூல் அமைப்பு யாது?

A] 6 காண்டம் + 118 படலங்கள் + 10589 பாடல்கள்

B] 6 காண்டம் + 116 படலங்கள் + 10009 பாடல்கள்

C] 6 காண்டம் + 118 படலங்கள் + 10009 பாடல்கள்

D] 6 காண்டம் + 116 படலங்கள் + 10589 பாடல்கள்

21) தமிழலக்கியத்தில் காப்பிய வளர்ச்சியானது கீழ்க்கண்ட யாருடைய படைப்பினால் உச்சநிலையை அடைந்தது?

A] இளங்கோவடிகள்

B] சீத்தலைச்சாத்தனார்

C] வால்மீகி

D] கம்பர்

22) 'தமிழுக்கு கதி' - என்று கீழ்க்கண்ட எந்த இருநூல்களை பெரியோர் குறிப்பிடுகின்றனர்?

A] கம்பராமாயணம், நாலடியார்

B] திருக்குறள், திருவாசகம்

C] திருக்குறள், கம்பராமாயணம்

D] திருமந்திரம், திருக்கோவை

23) கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டமானது எத்தனையாவது காண்டமாக அமைந்துள்ளது?

A] முதலாவது காண்டம்

B] இரண்டாவது காண்டம்

C] மூன்றாவது காண்டம்

D] நான்காவது காண்டம்

24) அயோத்தியா காண்டத்தில் காணப்படும் படலங்கள் மொத்தம் எத்தனை?

A] 10 படலங்கள்

B] 12 படலங்கள்

C] 13 படலங்கள்

D] 11 படலங்கள்

25) குகப்படலமானது அயோத்தியா காண்டத்தில் எத்தனையாவது படலமாக அமைந்துள்ளது?

A] 6 வது படலம்

B] 5 வது படலம்

C] 1 வது படலம்

D] 7 வது படலம்

26) பொருத்துக

1) இடர் - நிலவு

2) நாவாய் - துன்பம்

3) இறை - படகு

4) இந்து - தலைவன்

A] 2 3 4 1

B] 1 2 3 4

C] 3 1 4 2

D] 4 1 2 3

27) தொல்காப்பிய நெறி நின்ற புலவர் யார்?

A] வால்மீகி

B] தொல்காப்பியர்

C] கம்பர்

D] இளங்கோவடிகள்

28) உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும்; மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடலாம் - என்று கூறியவர் யார்?

A] ஜியார்ஜ் யூக்ளோ போப்

B] கால்டுவெல்

C] வீரமாமுனிவர்

D] தேவநேயப்பாவாணர்

விடைகள் - கம்பராமாயணம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 7 | C | 13 | C | 19 | C | 25 | D |
| 2 | B | 8 | A | 14 | B | 20 | A | 26 | A |
| 3 | D | 9 | D | 15 | C | 21 | D | 27 | C |
| 4 | A | 10 | A | 16 | C | 22 | C | 28 | B |
| 5 | C | 11 | C | 17 | A | 23 | B | | |
| 6 | B | 12 | D | 18 | D | 24 | C | | |

## 7) நற்றிணை

1) அரிகால் மாறிய அங்கண் அகல்வயல் - எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலை பாடிய புலவர் யார்?

A] ஔவையார்

B] கபிலர்

C] மிளைகிழான் நல்வேட்டனார்

D] வெண்ணிக்குயித்தியார்

2) பழங்காலத்தில் கீழ்க்கண்ட எந்தப் பெட்டியில் விதை கொண்டுசென்று ஈரமுள்ள அந்நிலத்தில் விதைத்தனர்?

A] பனையோலை

B] தென்னையோலை

C] ஈச்சவோலை

D] ஈரோலை

3) அரி - என்பதன் பொருள் யாது?

A] விஷ்ணு

B] வயல்

C] நெற்கதிர்

D] அரசன்

4) மிளைகிழான் நல்வேட்டனார் நற்றிணையில் மொத்தம் எத்தனை பாடல்களை பாடியுள்ளார்?

A] 01

B] 02

C] 03

D] 04

5) எட்டுத்தொகை நூல்களில் நல் என அடைமொழி கொடுத்து போற்றப்படும் நூல் எது?

A] நற்றிணை

B] குறுந்தொகை

C] புறநானூறு

D] அகநானூறு

6) கீழ்க்கண்ட எந்த நூலில் ஓரறிவு உயிர்களையும் விரும்பும் உயரிய பண்பு, விருந்தோம்பல், அறவழியில், பொருளீட்டல் முதலிய தமிழர்தம் உயர் பண்புகளைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக்கூறும் நூல் எது?

A] நாலடியார்

B] குறுந்தொகை

C] நான்மணிக்கடிகை

D] நற்றிணை

7) நற்றிணை நூல்களின் அடிவரையறை யாது?

A] 4 அடிச்சிற்றலையும் 8 அடிப்பேரலை

B] 9 அடிச்சிற்றலையும் 12 அடிப்பேரலை

C] 3 அடிச்சிற்றலையும் 6 அடிப்பேரலை

D] 4 அடிச்சிற்றலை 40 அடிப்பேரலை

8) நற்றிணைப் பாடல்களைத் தொகுத்தவர் யார்?

A] பாரதம் பாடிய பெருந்தேவனார்

B] இளம்பெருவழுதி

C] உக்கிரப்பெருவழுதி

D] பன்னாடு தந்த மாறன் வழுதி

9) நற்றிணை நூல்களில் இடபெற்றுள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] 400

B] 401

C] 250

D] 275

10) நற்றிணை நூல்களில் இடம்பெற்றுள்ள பாடல்களை மொத்தம் எத்தனை புலவர்கள் பாடியுள்ளனர்?

A] 250

B] 275

C] 280

D] 235

11) மிளைகிழான் நல்வேட்டனார் குறுந்தொகையில் மொத்தம் எத்தனை பாடல்களை பாடியுள்ளார்?

A] 01

B] 02

C] 03

D] 04

12) அரிகால் மாறிய அங்கண் அகல்வயல் - எனத் தொடங்கும் மிளைகிழான் நல்வேட்டனார் எழுதிய பாடலானது நற்றிணை நூலிலில் எத்தனையாவது பாடலாக அமைந்துள்ளது?

A] 220

B] 215

C] 210

D] 225

விடைகள் - நற்றிணை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | A | 3 | C | 4 | D | 5 | A |
| 6 | D | 7 | B | 8 | D | 9 | A | 10 | B |
| 11 | A | 12 | C | | | | | | |

## 8) புறநானூறு

1) பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய - எனத்தொடங்கும் புறநானூற்றுப் பாடலை பாடிய புலவர் யார்?

A] ஔவையார்

B] கண்ணகனார்

C] மிளைகிழான் நல்வேட்டனார்

D] கபிலர்

2) சான்றோர் பாலர் ஆப சாலார் சாலார் பாலார் ஆகுபவே - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A] நாலடி நானூறு

B] அனநானூறு

C] புறநானூறு

D] குறுந்தொகை

3) தொடை - என்பதன் பொருள் யாது?

A] பவளம்

B] அணி

C] உடலில் ஒரு உறுப்பு

D] மாலை

4) கண்ணகனார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த அரசருடைய அரசவையில் அவைக்களப் புலவர்களுள் ஒருவராக திகழ்ந்தார்?

A] கோப்பெருஞ்சோழன்

B] அரிமத்தன பாண்டியன்

C] வக்கபாகை ஆண்ட வரகுணப்பாண்டியன்

D] முதலாம் குலோத்துங்க சோழன்

5) சங்ககால மக்களின் வாழ்க்கைநிலை, மன்னர்களின் வீரம், புகழ், கொடை, வெற்றிகள் பற்றிய பல்வேறு செய்திகளைக் கூறும் நூல் எது?

A] குறுந்தொகை

B] புறநானூறு

C] நாலடியார்

D] நற்றிணை

6) தமிழரின் வரலாற்றை அறியவும், பண்பாட்டு உயர்வை உணரவும் பெரிதும் உதவும் நுல் எது?

A] குறுந்தொகை

B] அகநானூறு

C] புறநானூறு

D] நற்றிணை

7) பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய - எனத் தொடங்கும் பாடலானது புறநானூற்றின் எத்தனையாவது பாடலாக அமைந்துள்ளது?

A] 215 வது பாடல்

B] 216 வது பாடல்

C] 217 வது பாடல்

D] 218 வது பாடல்

விடைகள் - புறநானூறு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | C | 3 | D | 4 | A | 5 | B |
| 6 | C | 7 | D | | | | | | |

## 9) பெரியபுராணம்

1) அப்பூதியடிகள் பிறந்த ஊர் எது?

A] திங்களூர்

B] மங்களூர்

C] திருநாவலூர்

D] மதுரை

2) களவு, பொய், காமம், சினம் முதலிய குற்றங்களை நீக்கி வளமிகு வாழ்வை வாழ்ந்தவர் யார்?

A] சிவன்

B] அப்பூதியடிகள்

C] திருநாவுக்கரசர்

D] சம்மந்தர்

3) உறுவேனில் - என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?

A] உவமைத்தொகை

B] உருவகம்

C] உரிச்சொற்றொடர்

D] வினைத்தொகை

4) மந்தமாருதசீதன் - என்பதன் பொருள் யாது?

A] குளிர்ந்த நீர்

B] குளிர்ந்த இளந்தென்றல் காற்றுடன் கூடிய நீர்

C] கனநீர்

D] அழுக்கு நீர்

5) சூலை - என்பதன் பொருள் யாது?

A] கொடிய மனநோய்

B] கொடிய இதயநோய்

C] கொடிய முதுகுவலிநோய்

D] கொடிய வயிற்றுநோய்

6) திருநாவுக்கரசருக்கு அறுசுவை உணவை படைக்க தன் மூத்தமகனை அழைத்து கீழ்க்கண்ட எந்த இலையை அரிந்து வருமாறு அப்பூதியடிகள் கூறினார்?

A] வாழை இலை

B] தடிமான வாழைஇலை

C] வாழைக்குருத்து

D] கீழ்ப்பகுதி வாழைஇலை

7) ஒல்லை - என்பதன் பொருள் யாது?

A] வளமான

B] விரைவு

C] வளமான

D] துன்பம்

8) அரா - என்பதன் பொருள் யாது?

A] பாம்பு

B] மணம்

C] மிக வருந்தி

D] உள்ளங்கை

9) கீழ்க்கண்ட யாரை ஆசிரியர் நான்மறை கற்று வாய்மை தவறாதவர் என்று யாரைக் குறிப்பிடுகிறார்?

A] சம்பந்தர்

B] நாவுக்கரசர்

C] அப்பூதியடிகள்

D] அரசர்

10) அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர் - என்ற வரியில் இடம்பெற்றுள்ள அங்கணர் என்பதன் பொருள் யாது?

A] நெற்றிக்கண் உடைய சிவன்

B] சூலை நோயால் பாதிக்கப்பட்ட நாவுக்கரசர்

C] அப்பூதியடிகள்

D] சம்பந்தர்

11) அங்கணர் - என்பதன் இலக்கணம் குறிப்பு யாது?

A] வினைத்தொகை

B] வினையாலணையும் பெயர்

C] இருபெயரொட்டுத் பண்புத்தொகை

D] அன்மொழித்தொகை

12) விஷம் நீக்க சிவபெருமானை நோக்கி 'ஒன்றுகெலாம்' எனத் தொடங்கும் பதிகத்தை பாடியவர் யார்?

A] அப்பர்

B] சேக்கிழார்

C] மாணிக்கவாசகர்

D] அப்பூதியார்

13) பெரியபுராணத்தை இயற்றியவர் யார்?

A] சேக்கிழார்

B] பரஞ்சோதி முனிவர்

C] கலிக்கானநாயனார்

D] சுந்தரர்

14) சேக்கிழார் பிறந்த ஊர் எது?

A] திருப்போரூர்

B] குன்றக்குடி

C] குன்றத்தூர்

D] திருவல்லிக்கேணி

15) சேக்கிழாரின் இயற்பெயர் யாது?

A] அருள்மொழித்தேவர்

B] அருண்மொழித்தேவர்

C] அறுள்மொழித்தேவர்

D] அருணைத்தேவர்

16) சேக்கிழார் அவர்கள் கீழ்க்கண்ட யாரிடம் தலைமை அமைச்சராய் பணியாற்றினார்?

A] அநபாயச்சோழன்

B] அபாயச்சோழன்

C] அனபாயச்சோழன்

D] வக்கபாகையை ஆண்ட வரகுணப்பாண்டியன்

17) சேக்கிழார் பெற்ற சிறப்பு பெயர் யாது?

A] அருள்மொழித்தேவர்

B] உத்தமசோழப் பல்லவர்

C] உத்தமச்சோழப் பாண்டியர்

D] அநபாயச்சோழன்

18) கீழ்க்கண்டவற்றில் தொண்டர்சீர் பரவுவார் என்று அழைக்கப்படுபவர் யார்?

A] பரஞ்சோதி முனிவர்

B] திருநாவுக்கரசர்

C] சேக்கிழார்

D] திவ்வியக்கவி

19) பெரியரபுராணத்தில் மொத்தம் எத்தனை சிவனடியார்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது?

A] தனியடியார்க அறுபது + தொகையடியார் ஏழு

B] தனியடியார் அறுபத்திரண்டு + தொகையடியார் எட்டு

C] தனியடியார் அறுபத்தான்கு + தொகையடியார் ஒன்பது

D] தனியடியார் அறுபத்துமூன்று + தொகையடியார் ஒன்பது

20) பெரியபுராண நூலுக்கு சேக்கிழார் இட்ட பெயர் யாது?

A] திருத்தொண்டர் பதிகம்

B] திருத்தொண்டர் புராணம்

C] திருத்தொண்டர் வரலாறு

D] திருத்தொண்டர் திருவந்தாதி

21) தில்லை நடராசப்பெருமாள் கீழ்க்கண்ட எந்த வார்த்தையை அடியெடுத்துக் கொடுக்க பெரியபுராணம் பாடப்பெற்றதாக கூறப்படுகிறது?

A] உலகெலாம்

B] ஒன்றுகெலாம்

C] பொருள்கெலாம்

D] அன்புடையார்

22) சேக்கிழார் பெருமானை 'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' - எனப் புகழ்ந்தவர் யார்?

A] கவிமணி

B] அழகிய சொக்கநாத புலவர்

C] மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார்

D] பாரதிதாசன்

23) 'உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான், பெரியபுராணம்' என்று கூறியவர் யார்?

A] நாமக்கல் கவிஞர்

B] வீரமாமுனிவர்

C] மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார்

D] திரு.வி.கல்யாணசுந்தரனார்

24) பெரியபுராணத்தின் நூல் அமைப்பு யாது?

A] 2 காண்டம் + 13 சருக்கங்கள் + 4286 பாடல்கள்

B] 3 காண்டம் + 12 சருக்கங்கள் + 4286 பாடல்கள்

C] 3 காண்டம் + 13 சருக்கங்கள் + 4280 பாடல்கள்

D] 2 காண்டம் + 12 சருக்கங்கள் + 4280 பாடல்கள்

25) பெரியபுராண நூலை கீழ்க்கண்டவற்றில் எந்த நூலை முதல் நூலாக கொண்டு சேக்கிழார் இயற்றினார்?

A] திருத்தொண்டர் திருவந்தாதி

B] திருத்தொண்டர் பதிகம்

C] திருத்தொண்டத்தொகை

D] திருத்தொண்டர் வரலாறு

26) 'பிள்ளை பாதி; புராணம் பாதி' - என்று போற்றப்படும் பெரியபுராணத்தில் பிள்ளை பாதி என்பது கீழ்க்கண்ட யாருடைய வரலாற்றை குறிக்கிறது?

A] ஆளுடையப்பிள்ளை

B] ஆளுடைய அரசு

C] ஆளுடைய நம்பி

D] தொகையடியார்கள்

27) பெரியபுராண நூலில் சம்பந்தரின் வரலாறு மட்டும் மொத்தம் எத்தனை பாடல்களில் கூறப்பட்டுள்ளது?

A] 1250

B] 1254

C] 1256

D] 1230

28) பெரியபுராணத்தின் முதல் காண்டத்தில் மொத்தம் எத்தனை சருக்கங்கள் இடம்பெற்றுள்ளன?

A] ஆறு

B] ஐந்து

C] ஏழு

D] எட்டு

29) பெரியபுராணத்தின் இரண்டாம் காண்டத்தில் மொத்தம் எத்தனை சருக்கங்கள் இடம்பெற்றுள்ளன?

A] ஆறு

B] ஐந்து

C] ஏழு

D] எட்டு

30) பெரியபுராண நூலை பற்றி குறிப்பிடத்தக்க வகையில் ஆராய்ச்சி கொண்டு நாட்டுடைமையாக்கப்பட்ட ஒரே நூலான பெரியபுராண ஆராய்ச்சி நூலை எழுதியவர் யார்?

A] மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார்

B] இராசமாணிக்கனார்

C] துரைமாணிக்கம்

D] செல்வக்கேசவ முதலியார்

விடைகள் - பெரியபுராணம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 7 | B | 13 | A | 19 | D | 25 | C |
| 2 | C | 8 | A | 14 | C | 20 | B | 26 | A |
| 3 | D | 9 | C | 15 | B | 21 | A | 27 | C |
| 4 | A | 10 | A | 16 | A | 22 | C | 28 | B |
| 5 | B | 11 | D | 17 | B | 23 | D | 29 | D |
| 6 | C | 12 | A | 18 | C | 24 | A | 30 | B |

## 10) தமிழ்விடு தூது

1) நால்வகைப்பாவைகளும் வயலுக்கு எதுவாக அமைந்துள்ளதாக புலவர் குறிப்பிடுகிறார்?

A] வரப்புகள்

B] மடைகள்

C] ஏர்கள்

D] விதைகள்

2) தமிழுக்கு மடைகளாக இருப்பவை எவை?

A] வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா

B] துறை, தாழிசை, விருத்தம்

C] மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

D] வைதருப்பம், கௌடம், பாஞ்சலம், மாகதம்

3) தமிழுக்கு கீழ்க்கண்டவற்றில் நல்ல ஏர்களாக அமைவது எது என்று புலவர் கூறுகிறார்?

A] வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா

B] துறை, தாழிசை, விருத்தம்

C] மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

D] வைதருப்பம், கௌடம், பாஞ்சலம், மாகதம்

4) தமிழுக்கு விதைகளாக அமைவது எது?

A] வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா

B] துறை, தாழிசை, விருத்தம்

C] மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

D] வைதருப்பம், கௌடம், பாஞ்சலம், மாகதம்

5) தமிழுக்கு விதை விதைத்த பிறகு விளைபொருள்காக கிடைத்தவை எவை?

A] வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா

B] அறம், பொருள், இன்பம், வீடு

C] மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

D] வைதருப்பம், கௌடம், பாஞ்சலம், மாகதம்

6) கீழ்க்கண்டவற்றில் நாற்கரணங்கள் என அழைக்கப்படுவது எது?

A] வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா

B] துறை, தாழிசை, விருத்தம்

C] மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

D] வைதருப்பம், கௌடம், பாஞ்சலம், மாகதம்

7) கீழ்க்கண்டவற்றில் நன்னெறிகள் எதுவென்று புலவர் கூறுகிறார்?

A] வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா

B] துறை, தாழிசை, விருத்தம்

C] மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

D] வைதருப்பம், கௌடம், பாஞ்சலம், மாகதம்

8) போலிப்புலவர்கள் கூட்டம் பெருகாமல் இருக்க போலிப்புலவர்களின் தலையில் குட்டியவர் யார்?

A] அதிவீரராம பாண்டியன்

B] வில்லிபுத்தூரன்

C] ஒட்டக்கூத்தர்

D] புகழேந்தி புலவர்

9) போலிப்புலவர்கள் கூட்டம் பெருகாமல் இருக்க போலிப்புலவர்களின் செவியை அறுத்தவர் யார்?

A] அதிவீரராம பாண்டியன்

B] வில்லிபுத்தூரன்

C] ஒட்டக்கூத்தர்

D] புகழேந்தி புலவர்

10) போலிப்புலவர்களின் கூட்டம் பெருகாமல் இருக்க போலிப்புலவர்களின் தலையை வெட்டியவர் யார்?

A] அதிவீரராம பாண்டியன்

B] வில்லிபுத்தூரன்

C] ஒட்டக்கூத்தர்

D] புகழேந்தி புலவர்

11) பொருத்துக

1) வைதருப்பம் - சித்திரக்கவி
2) கௌடம் - வித்தாரக்கவி

3) பாஞ்சாலம் - ஆசுகவி
4) மாகதம் - மதுரகவி

A] 1 2 3 4

B] 2 3 4 1

C] 4 1 3 2

D] 3 4 1 2

12) சீத்தையர் - என்பதன் பொருள் யாது?

A] கீழானவர்

B] மேலானவர்

C] தற்பெருமை கொண்டவர்

D] எதுவுமில்லை

13) கரணத்தேர் - என்பதை பிரித்து எழுதுக

A] கரணம் + தேர்

B] கரணம் + ஏர்

C] கரணத்து + ஏர்

D] கரணத்து + தேர்

14) கீழ்க்கண்ட எந்த பாவகையால் உயர்திணைப் பொருளையோ அஃறிணைப்பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம் எனப்படுகிறது?

A] வெண்பா

B] ஆசிரியப்பா

C] வஞ்சிப்பா

D] கலிப்பா

15) நாளிகேரம் - என்பதன் பொருள் யாது?

A] பனை

B] தென்னை

C] வரப்பு

D] மடைகள்

## விடைகள் - தமிழ்விடு தூது

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 4 | D | 7 | D | 10 | C | 13 | C |
| 2 | B | 5 | B | 8 | A | 11 | D | 14 | D |
| 3 | C | 6 | C | 9 | B | 12 | A | 15 | B |

## 11) தேவாரம்

1) 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' - என்ற பாடலை பாடிய புலவர் யார்?

A] திருஞானச்சம்பந்தர்

B] திருநாவுக்கரசர்

C] சுந்தரர்

D] மாணிக்கவாசகர்

2) பிணி - என்பதன் பொருள் யாது?

A] துன்பம்

B] எமன்

C] பாதுகாப்பு

D] நோய்

3) திருநாவுக்கரசர் பிறந்த ஊர் எது?

A] திருவாமூர்

B] திருவாதவூர்

C] திருநாவலூர்

D] திருவதிகை

4) திருநாவுக்கரசருக்கு பெற்றோர் இட்டபெயர் யாது?

A] தாண்டகவேந்தர்

B] தருமசேனர்

C] மருணீக்கியார்

D] வாகீசர்

5) நாவுக்கரசர் கீழ்க்கண்ட எவற்றில் ஒருவராக விளங்குகிறார்?

A] நாயன்மார்கள்

B] ஆழ்வார்கள்

C] வைணவர்கள்

D] சைவ சமயக் குரவர்

6) நாவுக்கரசர் வாழ்ந்த காலம் யாது?

A] கி.பி. ஆறாம் நூற்றாண்டு

B] கி.பி. ஏழாம் நூற்றாண்டு

C] கி.பி. எட்டாம் நூற்றாண்டு

D] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

7) அப்பர் பிறந்த ஊரானது தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தின் அருகில் உள்ளது?

A] மதுரை

B] திருச்சி

C] வேலூர்

D] கடலூர்

8) தேவாரம் என்னும் சொல்லானது கீழ்க்கண்டவாறு எவ்வாறு பிரித்தால் தெய்வத்தன்மையுடைய இசைப்பாடல்கள் என்று பொருள்படும்?

A] தே + ஆரம்

B] தேவா + அம்

C] தே + வாரம்

D] தே + வ் + ஆரம்

9) தேவாரம் என்னும் சொல்லானது கீழ்க்கண்டவாறு எவ்வாறு பிரித்தால் தெய்வத்திற்கு சூட்டப்பட்ட பாமாலை என்று பொருள்படும்?

A] தே + ஆரம்

B] தேவா + அம்

C] தே + வாரம்

D] தே + வ் + ஆரம்

10) 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' - எனத்தொடங்கும் பாடலானது தேவாரம் நூலில் திருநாவுக்கரசர் பாடிய எத்தனையாவது திருமுறையில் அமைந்துள்ளது?

A] நான்காவது திருமுறை

B] ஐந்தாம் திருமுறை

C] ஆறாம் திருமுறை

D] மூன்றாம் திருமுறை

11) 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் பாடலானது கீழ்க்கண்ட யாரால் 'அச்சமில்லை அச்சமில்லை' என்ற பாடலாக பாடத் தூண்டியது?

A] பாரதிதாசன்

B] சுரதா

C] கவிமணி

D] பாரதியார்

விடைகள் - தேவாரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 4 | C | 7 | D | 10 | C |
| 2 | D | 5 | D | 8 | C | 11 | D |
| 3 | A | 6 | B | 9 | A | | |

## 12) சீறாப்புராணம்

1) தடக்கரி - என்பதன் பொருள் யாது?

A] யானை

B] மான்

C] புலி

D] சிங்கம்

2) உழுவை - என்பதன் பொருள் யாது?

A] யானை

B] மான்

C] புலி

D] சிங்கம்

3) பூண்ட வெள்ளெயி றிலங்கிட வாய்புலால் கமழ - என்ற வரியில் புலால் என்பதன் பொருள் யாது?

A] நெருப்பு

B] வெண்ணிற பற்கள்

C] காடு

D] இறைச்சி

4) வள்ளுகிர் - என்பதன் பொருள் யாது?

A] கூர்மையான நகம்

B] சிங்கம்

C] மதம் பொருந்திய யானை

D] தந்தம்

5) மடங்கல் - என்பதன் பொருள் யாது?

A] யானை

B] மான்

C] புலி

D] சிங்கம்

6) புலி முழங்கிடும் ஓசையினைக் கேட்ட அளவில் கீழ்க்கண்ட எந்த விளங்கானது தனது பிளந்த பாதங்களை கொண்டு ஓடியது என்று உமறுப்புலவர் கூறுகிறார்?

A] பன்றி

B] யானை

C] கரடி

D] சிங்கம்

7) கீழ்க்கண்ட எந்த விலங்கானது அடர்ந்த முடிகள் கொண்டு புலிகள் முழக்கம் கேட்டு நடுக்கம் கேட்டு ஓடியதாக கூறுகிறார்?

A] பன்றி

B] யானை

C] கரடி

D] சிங்கம்

8) கேழல் - என்பதன் பொருள் யாது?

A] மான்

B] பன்றி

C] கரடி

D] யானை

9) எண்கு - என்பதன் பொருள் யாது?

A] எருமை

B] யானை

C] சிங்கம்

D] கரடி

10) புளகிதம் - என்பதன் பொருள் யாது?

A] மகிழ்ச்சி

B] மலை

C] கேசரி

D] அழகு

11) சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

A] செய்குதம்பி பாவலர்

B] பச்சை இப்ராகிம் புலவர்

C] குணங்குடி மஸ்தான்

D] உமறுப்புலவர்

12) சீறாப்புராணத்தின் ஆசிரியர் பெயர் யாது?

A] கடிகை முத்துப்புலவர்

B] வள்ளல் சீதக்காதி

C] அப்துல் மரைக்காயர்

D] அபுல்காசிம் மரைக்காயர்

13) கீழ்க்கண்ட யார் வேண்டுகோளின்படி உமறுப்புலவர் அவர்கள் சீறாப்புராணத்தை படைத்தார்?

A] கடிகை முத்துப்புலவர்

B] வள்ளல் சீதக்காதி

C] வாலை வாரிதி

D] அபுல்காசிம் மரைக்காயர்

14) கீழ்க்கண்ட யாரின் உதவியால் சீறாப்புராணம் என்ற நூலானது முழுவதுமாக நிறைவுற்றது?

A] வாலை வாரிதி

B] வள்ளல் சீதக்காதி

C] கடிகை முத்துப்புலவர்

D] அபுல்காசிம்

15) உமறுப்புலவர் இயற்றிய வேறு நூல் எது?

A] முதுமொழிக்காஞ்சி

B] நபிகள் போற்றிகலிவெண்பா

C] முதுமொழிமாலை

D] முகுந்தமாலை

16) உமறுப்புலவர் வாழ்ந்த காலம் எது?

A] பதினாறாம் நூற்றாண்டு

B] பதினேழாம் நூற்றாண்டு

C] பதினெட்டாம் நுற்றாண்டு

D] பதினாறாம் நூற்றாண்டு

17) சீறாப்புராண நூலின் நூல் அமைப்பு யாது?

A] 3 பிரிவு + 5027 விருத்தப்பாக்கள்

B] 2 பிரிவு + 5025 விருத்தப்பாக்கள்

C] 3 பிரிவு + 5025 விருத்தப்பாக்கள்

D] 2 பிரிவு + 5027 விருத்தப்பாக்கள்

18) புலி வசனித்த படலமானது சீறாப்புராணத்தில் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது?

A] விலாதத்துக் காண்டம்

B] நுபுவ்வத்துக் காண்டம்

C] ஹிஜ்ரத்துக் காண்டம்

D] செம்பொருட்பிறப்பியற் காண்டம்

19) சீறாப்புராண நூலில் அமைந்துள்ள மொத்தப்படலங்கள் எத்தனை?

A] 97 படலங்கள்

B] 96 படலங்கள்

C] 91 படலங்கள்

D] 93 படலங்கள்

20) விலாதத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள படலங்கள் மொத்தம் எத்தனை?

A] 22 படலங்கள்

B] 23 படலங்கள்

C] 21 படலங்கள்

D] 24 படலங்கள்

21) நுபுவ்வத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள படலங்கள் மொத்தம் எத்தனை?

A] 22 படலங்கள்

B] 23 படலங்கள்

C] 21 படலங்கள்

D] 24 படலங்கள்

22) பொருத்துக

1) கான் - கரடி; 2) உழுவை - சிங்கம்

3) மடங்கல் - புலி; 4) எண்கு - காடு

A] 4 2 3 1

B] 3 1 2 4

C] 1 2 3 4

D] 4 3 2 1

விடைகள் - சீறாப்புராணம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 6 | A | 11 | D | 16 | B | 21 | C |
| 2 | C | 7 | C | 12 | A | 17 | A | 22 | D |
| 3 | D | 8 | B | 13 | B | 18 | A | | |
| 4 | A | 9 | D | 14 | D | 19 | C | | |
| 5 | D | 10 | A | 15 | C | 20 | B | | |

## 13) கலித்தொகை

1) ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல் - என்ற கலித்தொகை பாடலை பாடியவர் யார்?

A] சோழன்நல்லுருத்திரன்

B] நல்லுந்துவனார்

C] பெருங்கடுங்கோன்

D] மருதனிளநாகன்

2) பண்பெனப்படுவது - என்பது யாது?

A] சுற்றம் தழுவி வாழ்தல்

B] நட்பு கொண்டு வாழ்தல்

C] சான்றோர் வழிஅறிந்து வாழ்தல்

D] அன்புடையோரை பிரியாது வாழ்தல்

3) அன்பெனப்படுவது - என்பது யாது?

A] சுற்றம் தழுவி வாழ்தல்

B] அறிவார் சொல் கொண்டு வாழ்தல்

C] சான்றோர் வழி அறிந்து வாழ்தல்

D] அன்புடையோரை பிரியாது வாழ்தல்

4) அறிவெனப்படுவது - எது என்று கவிஞர் கூறுகிறார்?

A] சுற்றம் தழுவி வாழ்தல்

B] அறிவுடையார் சொல் கேட்டல்

C] சான்றோர் வழிஅறிந்து வாழ்தல்

D] அறிவிலார் சொல் பொறுத்தல்

5) நெருக்கம் எனப்படுவது யாது?

A] கொடுத்த வாக்கை காத்து நிற்பது

B] பிறர் அறியாது மறைபொருள் காத்தல்

C] ஒருபால் கோடாது ஒறுத்தல்

D] அன்புடையோரை பிரியாது வாழ்தல்

6) நிறைவு எனப்படுவது யாது?

A] கொடுத்த வாக்கை காத்து நிற்பது

B] பிறர் அறியாது மறைபொருள் காத்தல்

C] ஒருபால் கோடாது ஒறுத்தல்

D] அன்புடையோரை பிரியாது வாழ்தல்

7) நீதிமுறைமை எனப்படுவது யாது?

A] கொடுத்த வாக்கை காத்து நிற்பது

B] பிறர் அறியாது மறைபொருள் காத்தல்

C] ஒருபால் கோடாது ஒறுத்தல்

D] இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளல்

8) நல்லந்துவனார் அவர்கள் கலித்தொகையில் கீழ்க்கண்ட எந்தப்பகுதியை பாடியுள்ளார்?

A] குறிஞ்சிக்கலி

B] முல்லைக்கலி

C] பாலைக்கலி

D] நெய்தற்கலி

9) நெய்தற்கலியில் இடம்பெற்றுள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] 33

B] 29

C] 27

D] 31

10) கலித்தொகையை தொகுத்த புலவர் யார்?

A] சோழன்நல்லுருத்திரன்

B] கபிலர்

C] நல்லந்துவனார்

D] மருதனிளநாகன்

11) கலித்தொகையில் உள்ள பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] 148

B] 200

C] 160

D] 150

12) கீழ்க்கண்ட எந்த நூலை படிக்கும் பொழுது கருத்தாழமும், ஓசையின்பமும் நம் உள்ளத்தினைக் கொள்ளை கொள்ளும் என்று தமிழ்ச்சான்றோர் கூறுகின்றனர்?

A] ஐங்குறுநூறு

B] பதிற்றுப்பத்து

C] கலித்தொகை

D] நற்றிணை

13) 'போற்றாரைப் பொறுத்தல்' என்பது______எனப்படும்?

A] பொறை

B] முறை

C] நிறை

D] குறை

விடைகள் - கலித்தொகை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | C | 3 | A | 4 | D | 5 | A |
| 6 | B | 7 | C | 8 | D | 9 | A | 10 | C |
| 11 | D | 12 | C | 13 | A | | | | |

## 14) நந்திக் கலம்பகம்

1) கவிகை - என்பதன் பொருள் யாது?

A] மழை

B] குடை

C] செல்வம்

D] நீர்

2) நந்திக்கலம்பகம் என்னும் நூலில் கீழ்க்கண்ட எந்த மன்னனை பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடப்பெற்றுள்ளது?

A] முதலாம் நந்திவர்மன்

B] இரண்டாம் நந்திவர்மன்

C] மூன்றாம் நந்திவர்மன்

D] நான்காம் நந்திவர்மன்

3) நந்திக்கலம்பக நூலின் காலம் யாது?

A] கி.பி. எட்டாம் நூற்றாண்டு

B] கி.பி. ஆறாம் நூற்றாண்டு

C] கி.பி. ஏழாம் நூற்றாண்டு

D] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

4) கலம்பக நூல்களில் முதல் நூல் எது?

A] திருவரங்க கலம்பகம்

B] மதுரைக் கலம்பகம்

C] நந்திக் கலம்பகம்

D] தில்லைக் கலம்பகம்

5) பலவகைப் பொருள்களைப் பற்றிப் பலவகைப் பாடல்களைக் கலந்து இயற்றப்படும் நூல்___எனப்படும்?

A] உலா

B] உலா

C] அந்தாதி

D] கலம்பகம்

6) பணை - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] மூங்கில்

B] ஆல்

C] அரசு

D] மரம்

## விடைகள் - நந்திக்கலம்பகம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | B | 3 | D | 5 | D |
| 2 | C | 4 | C | 6 | A |

## 15) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

1) மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் - எனத்தொடங்கும் பாடலை பாடியவர் யார்?

A] நாதமுனிகள்

B] ஆண்டாள்

C] குலசேகர ஆழ்வார்

D] அழகிய சொக்கநாதப்பிள்ளை

2) குலசேகர ஆழ்வார் பிறந்த ஊர் எது?

A] கோட்டயம்

B] திருவஞ்சைக்களம்

C] திருவாமூர்

D] திருவனந்தபுரம்

3) குலசேகர ஆழ்வார் கீழ்க்கண்ட யாரிடம் மிகுதியாக பத்தி கொண்டிருந்தார்?

A] நம்மாழ்வார்

B] சங்கரனார்

C] விஷ்ணு

D] இராமபிரான்

4) குலசேகர ஆழ்வார் அவர்கள் தமிழில் இயற்றிய நூல் பெயர் யாது?

A] பெருமாள் திருமொழி

B] முகுந்தமாலை

C] வயந்தமாலை

D] முதுமொழிமாலை

5) குலசேகர் வடமொழியில் இயற்றிய நூல் எது?

A] பெருமாள் திருமொழி

B] முகுந்தமாலை

C] வயந்தமாலை

D] முதுமொழிமாலை

6) திருவரங்கத்தின் எத்தனையாவது மதிலுக்கு குலசேகரன் வீதி என்னும் பெயர் வைக்கப்பட்டுள்ளது?

A] முதல் மதில்

B] இரண்டாவது மதில்

C] மூன்றாவது மதில்

D] கடைசி மதில்

7) கீழ்க்கண்ட எந்த நூலானது தீந்தமிழ்ப் பனுவல் என அழைக்கப்படுகிறது?

A] பெருமாள் திருமொழி

B] பெரியதிருமொழி

C] முகுந்தமாலை

D] நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

8) குலசேகர் இயற்றிய பெருமாள் திருமொழி நூலானது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் எத்தனையாவது தொகுப்பில் உள்ளது?

A] முதல் ஆயிரம்

B] இரண்டாவது ஆயிரம்

C] மூன்றாவது ஆயிரம்

D] நான்காவது ஆயிரம்

9) பெருமாள் திருமொழி நூலில் உள்ள பாசுரங்கள் மொத்தம் எத்தனை?

A] இருனூற்றைந்து

B] நூற்றைந்து

C] நூறு

D] இருநூறு

விடைகள் - நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | B | 3 | D | 4 | A | 5 | B |
| 6 | C | 7 | D | 8 | A | 9 | B | | |

## 16) நிற்க நேரமில்லை

1) சீக்கிரம் செல்க நேர்வழியில் - எனத் தொடங்கும் பாடலை இயற்றியவர் யார்?

A] சாலை.இளந்திரையன்

B] சாலினி.இளந்திரையன்

C] க.சச்சினாந்தன்

D] ஆலந்தூர் மோகனரங்கன்

2) செல்லும் வழியில் முன்னேறிச் செல்வதற்கு கீழ்க்கண்ட எந்த இரண்டும் துணையாக இருப்பதாக புலவர் குறிப்பிடுகிறார்?

A] இரண்டு கைகள்

B] இரண்டு கால்கள்

C] கண்கள், காதுகள்

D] கால்கள், மனஉறுதி

3) செடியின் வெற்றி கீழ்க்கண்டவற்றில் எதில் இருப்பதாக கவிஞர் குறிப்பிடுகிறார்?

A] பூ

B] இலை

C] வேர்

D] தண்டு

4) கீழ்க்கண்ட எந்த கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகி பின் தமிழ்த்துறை தலைவரானார்?

A] இந்திய பல்கலைக்கழகம்

B] தில்லிப் பல்கலைக்கழகம்

C] உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்

D] மும்பை பல்கலைக்கழகம்

5) கீழ்க்கண்டவற்றில் எந்த சங்கம் தோன்றக் சாலை.இளந்திரையன் காரணமாக அமையவில்லை?

A] உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம்

B] உலகத் தமிழ் பண்பாட்டுக் கழகம்

C] சென்னைத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம்

D] தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம்

6) சாலை.இளந்திரையன் அவர்கள் எந்த ஆண்டின் போது தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றார்?

A] 1990

B] 1991

C] 1992

D] 1993

7) நிற்க நேரமில்லை - என்ற தலைப்பில் சாலை.இளந்திரையன் எழுதிய கவிதையானது கீழ்க்கண்ட எந்த தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது?

A] பூத்தது மானுடம்

B] புரட்சி முழக்கம்

C] உரை வீச்சு

D] காவல் துப்பாக்கி

8) சாலை.இளந்திரையன் எழுதிய எந்த இருநூல்களானது தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசுகள் பெற்றுள்ளன?

A] காவல் துப்பாக்கி, கேள்விகள் ஆயிரம்

B] புரட்சி முழக்கம், உரை வீச்சு

C] ஏழாயிரம் எரிமலைகள், தமிழுக்காக

D] புதிய கல்விக்கொள்கை, நெருப்பை வளர்க்கிறார்கள்

9) சிறுவயதில் தன் குடும்பத்தால் சொக்கன் என அழைக்கப்பட்ட புலவர் யார்?

A] முடியரசன்

B] சுரதா

C] க.சச்சினாந்தன்

D] சாலை.இளந்திரையன்

விடைகள் - நிற்க நேரமில்லை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 3 | A | 5 | C | 7 | A | 9 | D |
| 2 | C | 4 | B | 6 | B | 8 | B | | |

நன்றி - பழனி முருகன்